# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)

மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## உலக தாய்மொழி தினம் 2024
## முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கலைத்திறன் போட்டிகள் பற்றிய அறிக்கை

நாள் : 21.02.2024 இடம் : கல்லூரி வளாகம்

தாய் மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பினை மாணவ மாணவியர் அறிந்து கொள்ளும் வகையில் செங்காந்தள் இலக்கிய மன்றம் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஒருங்கிணைப்பில் உலக தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. அத்தினத்தை முன்னிட்டு 21.02.2024 அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றது. கல்லூரி நிர்வாகி அருட்சகோதரி பர்த்தலமேயு, கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் சிறுமலர், கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி அமலி புஷ்பம் ஆகியோர் இவ்விழாவிற்கு முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் சிறுமலர் அவர்கள் தமிழின் சிறப்புகள் குறித்து வாழ்த்துரை வழங்கினார். பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான கிராமிய நடனம், மாறுவேடம், கவிதை, கட்டுரை, ஓவியம், பேச்சுப்போட்டி, நெருப்பிலா சமையல் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளின் முடிவில் பங்கேற்ற அனைத்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பங்கேற்புச் சான்றிதழும் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்கப்பட்டன. அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்று வெற்றி பெற்ற **புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கும்,** கல்லூரி அளவில் **சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கும்** கல்லூரி நிர்வாகி, முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோரால் **சுழற்கோப்பையும் பரிசுகளும்** வழங்கப்பட்டன. இறுதியாக கல்லூரிப்பண் மற்றும் நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)
மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## உலக தாய்மொழி தினம் 2024
## முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு
## மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கலைத்திறன் போட்டிகள்
பற்றிய அறிக்கை

நாள் : 21.02.2024 இடம் : கல்லூரி வளாகம்

















